


ஒத்திகைக் கடத்தல் காண்டத்தை வெற்றிகரமாக முடித்த கையோடு, தனது முதல் தாக்குதல் நடவடிக்கையில் முழுமூச்சாக இறங்கியது ஹிஸ்புல்லா. ஹிஸ்புல்லாவுக்கு மட்டுமல்ல;அமெரிக்காவுக்கும் இது ஒருவகையில் 'முதல்'தான். தன்னுடைய சரித்திரத்தில் அமெரிக்கா சந்தித்த முதல் அதிபயங்கரத் தாக்குதல் என்பது, ஹிஸ்புல்லாவால் நிகழ்த்தப்பட்ட அந்தத் தூதரகத் தாக்குதல்தான்.

பின்னாளில், அல் காயிதா எத்தனையோ முறை இந்தப் பாணியை வெற்றிகரமாகக் கையாண்டு 'புகழ்பெற்று'விட்டது என்றாலும், தூதரகங்களைத் தாக்குவதன்மூலம் ஒரு தேசத்தின் அரசை நிலைகுலைய வைக்கலாம் என்று கண்டுபிடித்து, ஆரம்பித்து வைத்தது ஹிஸ்புல்லாதான்.

பெய்ரூத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது ஹிஸ்புல்லா தற்கொலைப் படைப் போராளி ஒருவன், வேன் மோதி குண்டு வெடிக்கச் செய்து, தானும் பிராணனை விட்ட சம்பவம் அது. ஏப்ரல் 18, 1983 அன்று நடந்த இந்தச் சம்பவம்தான், முதல் முதலில் ஹிஸ்புல்லா எப்பேர்ப்பட்ட தீவிரவாத இயக்கம் என்பதை உலகுக்கு உணர்த்தியது. அதற்கு முன்னால், ஓர் அமெரிக்க இலக்கைக் குறிவைத்து இப்படிப்பட்ட நேரடித் தாக்குதல் ஏதும் நிகழ்த்தப்பட்டதில்லை.

இந்தத் தாக்குதலைக் காட்டிலும், இதற்கான காரணம் மிக முக்கியமானது.

லெபனான் உள்நாட்டு யுத்தத்தில் இஸ்ரேல் நுழைந்திருந்த நேரம் அது. பாலஸ்தீன் போராளி இயக்கத்தினருக்குப் பதிலடி தருகிறோம் என்கிற போர்வையில், தெற்கு லெபனானுக்குள் புகுந்த இஸ்ரேலியப் படை, சப்ரா (Sabra), ஷாட்டில்லா (Shatilla) என்கிற இரு இடங்களில் இருந்த பாலஸ்தீன் அகதிகள் முகாமைக் குறிவைத்துத் தாக்கத் தொடங்கின.

இந்த இரு அகதிகள் முகாமைத் தாக்கும்படி அமெரிக்க உளவுத்துறை, இஸ்ரேலிய உளவு அமைப்பான மொஸாடுக்கு அனுப்பிய தகவலை, சிரியா எப்படியோ ஒட்டுக்கேட்டு, ஹிஸ்புல்லா தலைமைக்குத் தெரிவித்துவிட்டது. ஹிஸ்புல்லாவுக்கும் சிரியா அரசுக்கும் இடையே இருந்த உறவின் நெருக்கம் அப்படிப்பட்டது.

ஆனால், தகவல் வந்தது கடைசி நேரம் என்பதால், ஹிஸ்புல்லா போராளிகளால் அந்த இரண்டு அகதிகள் முகாமைக் காப்பாற்ற முடியவில்லை. ஆயிரக்கணக்கான பாலஸ்தீன் மக்கள், முகாமுக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஹிஸ்புல்லா, அதற்குப் பதிலடி தருவதற்காகத் தேர்ந்தெடுத்த நடவடிக்கைதான், இந்தத் தூதரகத் தாக்குதல்.

மிகவும் சாமர்த்தியமாகத் திட்டமிடப்பட்ட தாக்குதல் அது. ஒரு வண்டி நிறைய வெடிமருந்தை ஏற்றிக்கொண்டு போய், தூதரகக் கட்டடத்தின் மீது மோதுவது என்பதுதான் திட்டம். ஆனால், அமெரிக்கத் தூதரக வளாகத்தில் எந்த ஓர் அந்நிய வாகனமும் அனுமதிக்கப்படாது. காம்பவுண்டுக்கு வெளியிலேயே நிறுத்திவிடுவார்கள். மீறி ஓட்டிக்கொண்டு போவதென்றால், ஒருவேளை திட்டம் கைகூடலாம், அல்லது பாதி வழியிலேயே புஸ்வாணமாகலாம்.

அப்படிக் குறைப்பிரசவமாகிவிடக் கூடாது என்பதில், ஹிஸ்புல்லா தெளிவாக இருந்தது. என்ன செய்யலாம்?

பெய்ரூத்தில் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டதிலிருந்து அங்கு நடைபெற்ற சம்பவங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்கள். யார் யார் வந்திருக்கிறார்கள், உள்ளே என்னென்ன மாதிரியான நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் நடக்கின்றன, அடிக்கடி வந்து போவது யார், உள்ளிருந்து வெளியே போகும் வாகனங்கள் என்னென்ன, எத்தனை வாகனங்கள் அங்கே இருக்கின்றன, அவற்றில் எது எது எல்லாம் அடிக்கடி வெளியே போய் வருகின்றன என்று, ஒன்றுவிடாமல் கவனித்துக் குறித்துக்கொண்டார்கள்.

அதிக நாள் இல்லை. சுமார் பத்துப் பன்னிரண்டு தினங்கள் இந்த விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தபோதே, அவர்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. சரியாக ஒரு வருடம் முன்னால் பெய்ரூத் அமெரிக்கத் தூதரகத்துக்குச் சொந்தமான வேன் ஒன்று திருடு போயிருக்கிறது என்பதே அது.

இது போதாதா?

லெபனான் முழுவதிலும் இயங்கிக்கொண்டிருந்த திருட்டு வியாபாரிகள் அத்தனை பேரையும், சல்லடை போட்டுத் துளைத்தெடுத்து, அடுத்த ஒரு வாரத்தில் அந்தக் குறிப்பிட்ட வேனைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

புதிதாக ஒரு வாகனம் தூதரகத்துக்குள் நுழைவதற்கும், ஒரு வருடமாகக் காணாமலே போயிருந்தாலும் அவர்களுக்குச் சொந்தமான ஒரு வாகனம் நுழைவதற்கும் வித்தியாசம் உண்டில்லையா? சட்டென்று முதல் பார்வையில் சந்தேகம் வராது. தவிரவும் அதிர்ஷ்டவசமாக அமெரிக்கத் தூதரகத்தில் அந்தக் காணாமல் போன வேன் மாதிரியே, வேறு நான்கு வேன்களும் இருந்தன. ஆகவே, அந்தத் தொலைந்த வேனை எடுத்துக்கொண்டு உள்ளே போவதில் பிரச்னை இருக்காது என்று தீர்மானித்தது ஹிஸ்புல்லா.

கிட்டத்தட்ட காயலான் கடைச் சரக்குத் தரத்தில் இருந்த அந்த வேனை, விலை கொடுத்து வாங்கிவந்து கொஞ்சம் சொஸ்தம் செய்தார்கள். பெயிண்டெல்லாம் அடித்து, தூசு தட்டி, சீட்டுகளைச் சரி செய்து, ஒரு தூதரக வேன் கெட்டப்புக்குக் கிட்டத்தட்ட கொண்டுவந்துவிட்டார்கள்.

பிறகு, 181 கிலோ வெடிமருந்தை அந்த வேனுக்குள் ஏற்றினார்கள். யார் பெற்ற பிள்ளையோ ஓர் இளைஞன் அந்தத் திட்டத்தின் கருவியாகச் செயல்பட முன்வந்தான். அவனுக்கு வேன் ஓட்டக் கற்றுக்கொடுத்து, நெற்றியில் மானசீக வீரத் திலகம் இட்டு அனுப்பிவைத்தார்கள்.

அந்தத் தற்கொலைப் போராளி, வழியில் எங்கும் இறங்கி டீ சாப்பிடாமல் நேராக ஓட்டிக்கொண்டு பெய்ரூத் தூதரக வாசலுக்குப் போனான்.

வாயில் காப்பவர்களுக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லை. வேனைப் பார்த்ததுமே கதவுகளைத் திறந்துவிட்டார்கள். கடமை வீரன், எதுகுறித்தும் கவலைப்படாமல் நேரே ஓட்டிக்கொண்டுபோய் மோதிக் கவிழ்த்தான்.

எழுந்த பெரும் சப்தமும் நெருப்பும் புகையும் நடந்தது என்னவென்பதையே சில நிமிடங்களுக்கு உணரமுடியாமல் செய்துவிட்டன. தூதரகக் கட்டடத்தின் முன் பகுதி முழுவதும் சீட்டுக்கட்டு போல் உதிர்ந்து சரிந்தன. அறுபத்து மூன்று அமெரிக்கர்கள் அந்தக் கணமே அமரர் ஆனார்கள்.

அதில் எட்டுப்பேர் சி.ஐ.ஏ. அதிகாரிகள். அந்த எட்டில் ஒருத்தர் மிகவும் முக்கியஸ்தராக மதிக்கப்பட்ட சி.ஐ.ஏவின் மத்தியக் கிழக்குப் பிரிவின் இயக்குநர் ராபர்ட் ஏம்ஸ். (Robert Ames)

வெலவெலத்துப் போன அமெரிக்கா, உடனடியாகத் தனது தூதரகத்தை இன்னும் கொஞ்சம் பாதுகாப்பான இடம் என்று கருதப்பட்ட கிழக்கு பெய்ரூத்துக்கு மாற்றியது. நீ எங்கே போனாலும் விடமாட்டேன் என்று ஹிஸ்புல்லாவும் பின்னாலேயே போய், அடுத்த வருடமே (செப்டெம்பர் 20, 1984) அங்கும் ஒரு கார் குண்டுத் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் தூதரகக் கட்டடத்தின் பின்பகுதி பலத்த சேதமடைந்ததுடன், இரண்டு அமெரிக்க ராணுவ வீரர்கள் உள்பட இருபது பேர் கொல்லப்பட்டார்கள்.

ஹிஸ்புல்லாவின் முதல் பெரிய நடவடிக்கையாகச் சொல்லப்படும் இந்தத் தூதரகத் தாக்குதல்கள், சம்பவம் நடந்த காலகட்டத்தில் இஸ்ரேலுக்கு உண்டாக்கிய அச்சம் வருணிக்க முடியாதது. யார் இவர்கள், யார் இவர்கள் என்று இஸ்ரேல் உளவுப்படை சோறு தண்ணி இல்லாமல் தகவல் சேகரிக்க நாயாய் அலைந்தது.

அதற்கு முன் ஹிஸ்புல்லாவின் தலைவர்கள், தொண்டர்கள் யாருடைய புகைப்படமும் வெளியானதில்லை, அவர்களைப் பற்றிய எந்த ஒரு தகவலும் மீடியாவுக்குக் கிடைத்ததில்லை என்பதால், 'ஹிஸ்புல்லா' என்கிற அவர்களே அறிவித்த பெயர் ஒன்றுதான் இஸ்ரேல் வசமிருந்த ஒரே ஆதாரம்.

உடனடியாக இஸ்ரேல் தன்னுடைய தூதரகங்களுக்கும் பிற அரசு அலுவலகங்களுக்கும் மிகத் தீவிர பாதுகாப்புகளைச் செய்ய ஆரம்பித்தது. கூடவே, ஹிஸ்புல்லா குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்கென்றே தன்னுடைய உளவுத்துறையில் ஒரு தனி 'செல்'லை அமைத்தது. லெபனான் மட்டுமல்லாமல் சிரியா, ஜோர்டன், எகிப்து என்று அக்கம்பக்கத்து தேசங்களில் எல்லாமும் ஹிஸ்புல்லாவைக் குறித்து விவரம் சேகரிக்க அவர்கள் அலைந்துகொண்டிருந்தார்கள்.

ஹிஸ்புல்லா இதைப்பற்றியெல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்ளவேயில்லை. அவர்களது அடுத்த தாக்குதல் திட்டம், அப்போதே தயாராக இருந்தது. இம்முறையும் அமெரிக்க இலக்குதான்.

வேறு வழி? லெபனான் உள்நாட்டு யுத்த சோகங்களில் முக்கியமானது, அங்கே அமைதி காக்கிறேன் பேர்வழி என்று அமெரிக்கப் படை வந்து உட்கார்ந்தது. அமெரிக்காவின் வெளிப்படையான இஸ்ரேலிய ஆதரவு உலகுக்கே தெரிந்தபோதும், லெபனானில் அமைதிக்கு வழி வகுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு அது தன் ராணுவத்தை அனுப்பியதையும் யாருமே எதிர்க்கவில்லை. பயம்தான் காரணம்.

மறுபுறம், அமெரிக்கப் படை வந்திறங்கிய தெம்பில் இஸ்ரேல் மிகத் தீவிரமாக லெபனானில் உள்ள பாலஸ்தீனிய இலக்குகளின் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்திருந்தது.

இதில் கடுப்படைந்த ஹிஸ்புல்லா, முதல் முறையாக அமெரிக்கத் துருப்புகளைக் குறிவைத்துத் தாக்கத் திட்டமிட்டது. வருடம், 1983. அக்டோபர் மாதம் 23-ம் தேதி.

பெய்ரூத் துறைமுகத்தை ஒட்டிய பகுதியில் முகாம் அமைத்திருந்தது அமெரிக்க ராணுவம். அமைதி காப்பதான பாவனையில், கடல் பகுதியை நோட்டமிடுவதுதான் நோக்கம். லெபனான்

போராளிகளுக்கு ஆயுதங்கள் எடுத்துவரும் படகுகளையும் கப்பல்களையும் வழியிலேயே மடக்கி, ஆயுதங்களைக் கைப்பற்றுவதுதான் அவர்களின் முதல் திட்டம். ஆனால் ஹிஸ்புல்லா உள்ளிட்ட லெபனானின் அன்றைய எந்த ஒரு இயக்கத்துக்கும் கடல் மார்க்கமாக ஆயுதங்கள் வரவில்லை. சிரியாவிலிருந்தும் ஈரானிலிருந்தும் தரை மார்க்கமாக மட்டுமே வந்துகொண்டிருந்தன.

இருப்பினும், சைப்ரஸ் தீவுகளிலிருந்து மருந்துப் பொருள்கள், உணவுப் பொருள்கள் போன்றவை கொஞ்சம் போல் கடல் மார்க்கமாக லெபனானுக்குத் தருவிக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

எது எப்படியானாலும் அங்கே முகாமிட்டிருக்கும் அமெரிக்கர்களை மூட்டை கட்டிக்கொண்டு ஓடச் செய்வதுதான் நோக்கம். ஆகவே ஹிஸ்புல்லா ஒரு டிரக் பாம் தயார் செய்தது.

சாதாரண மளிகை சாமான்களை எடுத்துச் செல்லும் டிரக் ஒன்றை செகண்ட் ஹேண்டில் வாங்கி, பெயிண்டைச் சுரண்டிவிட்டு ராணுவ அழுக்குப் பச்சை கலருக்கு மாற்றினார்கள். அமெரிக்க ராணுவ டிரக் ஒன்றின் நம்பர் பிளேட்டையே திருடி அதில் மாட்டிவிட்டு, உள்ளே சுமார் 175 கிலோ எடையுள்ள டி.என்.டி. வெடிபொருளை நிரப்பி, வழக்கம்போல் ஒரு தற்கொலை வீரனை வண்டி ஓட்டச் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

காரியக் கண்ணனான அந்தத் தற்கொலைப் போராளி, ரைட் ராயலாக அமெரிக்க முகாமுக்குள் புகுந்து, வண்டியின் வேகத்தை நிமிஷ நேரத்தில் பலமடங்காக அதிகரித்துப் போய் மோதிவிட்டான்.

மிகக் கோரமான தாக்குதல் அது. 241 அமெரிக்க வீரர்கள் உருத்தெரியாமல் அழிந்துபோனார்கள். 242-வது நபராக அந்தப் பெயர் தெரியாத ஹிஸ்புல்லா போராளி. அங்கே உயிர்தப்பிய அமெரிக்க வீரர்கள், அதன்பின் அந்தப் பிராந்தியத்துக்கே வரவில்லை.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அமெரிக்க உளவுத்துறையும் இஸ்ரேலியப் படைகளும் லெபனானில் எங்கெல்லாம் ஷியா முஸ்லிம்கள் வசிக்கிறார்களோ, அங்கெல்லாம் குறிபார்த்துப் போய்த் தேடத் தொடங்கிவிட்டார்கள். போராளியா, சுத்த சன்மார்க்க சாதுவா என்றெல்லாம் கூடப் பார்ப்பதில்லை. 'நீ ஷியாவா? வா, எங்களுடன்' என்று இழுத்துப் போய்விடுவார்கள்.

இந்த அத்துமீறலைக் கண்டிக்கவோ, தடுக்கவோ வக்கில்லாத லெபனான் அரசு, தேசத்தைக் காப்பாற்றும்படி ஹிஸ்புல்லாவையே கேட்டுக்கொண்டது! அந்தக் கணத்தில்தான் ஹிஸ்புல்லா லெபனானின் ஒரு தவிர்க்க முடியாத சக்தி என்பதும் உறுதியானது.